05.02.2020 O.S.68/2013 - P.W.2 - Umapathy

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை. எனது அண்ணன் மகன் அரவிந்தன் (5ம் வாதி) சொல்லி தான் நான் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். தாவா வழக்கு எனக்கு அண்ணன் புதுமையால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கூட்டு சொத்துக்களில் பங்கு வேண்டும் என்று கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி புதுமை, எனது பெரியப்பா கோவிந்த கவுண்டரின் மகன். எனது தகப்பனார் பெயர் ராஜா கவுண்டர். எனது அப்பா ராஜா கவுண்டரும், எனது பெரியப்பா கோவிந்த கவுண்டரும் பெரியப்பா, சித்தப்பா மகன்கள் என்றால் சரிதான். என் தாத்தாவின் அண்ணன் மகன் தான் கோவிந்த கவுண்டர். கோவிந்த கவுண்டரின் குடும்ப உறவுகள் எனக்கு தெரியும். எனக்கு தமிழ், எழுத, படிக்க தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை 5ம் வாதி அரவிந்தன் சொன்னார். 20.02.2003ல் கோவிந்த கவுண்டரின் மனைவி வள்ளியம்மாள், அவருடைய மகன்கள் மற்றும் மகள்கள் அவருடைய சொத்துக்களை பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் ஒரு சொத்து மட்டும் பாகம் செய்துக்கொண்டார்கள். மற்ற சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாமல் அப்படியே உள்ளது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை நான் படித்துப் பார்க்கிறேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை, ஆனால் அதனை படிக்கும் போது கேட்டுள்ளேன். அதனை அரவிந்தன் (5ம் வாதி) படிக்கும்போது கேட்டுள்ளேன். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை அரவிந்தன் யார், யாருக்கு எந்த எந்த சொத்துக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டது என்று படித்துப் காண்பித்தாரா என்றால் ஒரு சொத்து மட்டும்

பிரிக்கப்பட்டதாகவும், மற்ற சொத்துக்கள் பிரிப்பதில் பிரச்சனை ஏற்பட்டு விட்டதாகவும் கூறினார். அவ்வாறு பிரிக்கப்பட்டதாக சொல்லப்படும் சொத்து எந்த சர்வே நெம்பர், எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரம் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. யார், யாருக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. பாகப்பிரிவினையில் கண்டுள்ள சொத்துக்கள் கள்ளூரில் உள்ளது. தாவா சொத்துக்களின் சர்வே எண்கள், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களின் இடங்கள் தெரியும். தாவா சொத்துக்களுக்கான மூலப் பத்திரங்களை நான் பார்க்கவில்லை. தாவா சொத்துக்கள் கூட்டு சொத்துக்கள் என்பதால் பத்திரங்கள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் யார், யார் பெயரில், எந்தெந்த தேதிகளில் வாங்கப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு சிட்டா, அடங்கல், பட்டா ஆகியவை யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்குண்டான பத்திரங்கள் எதையும் நான் பார்த்ததில்லை. புதுமை ஏஜென்சிஸ் என்று சிமெண்ட் கடையை புதுமை நடத்தி வந்தாரா என்றால் இல்லை. அதற்கு குடியாத்தம் பாரத வங்கியில் புதுமை கடன் வாங்கினாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கடன் வாங்கினார் என்றாலும், அந்த கடனை கட்ட முடியாமல் போனதால், குடியாத்தம் பாரத வங்கி அந்த கடனுக்காக அவருடைய சொத்துக்களை ஏலத்தில் விட்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பெருமை என்பவர் ஓட்டல் நடத்தி வந்தார். கோவிந்த கவுண்டருடன் எத்தனை பேர் உடன் பிறந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. கோவிந்த கவுண்டரின் சகோதர, சகோதரிகள் மற்றும் அவர்களுக்கிடையில் ஏற்பட்ட விவகாரங்கள் பற்றி நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. தாவா சொத்துக்களை பற்றியும், வாதி, பிரதிவாதிகள் அவர்களது குடும்பங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று

சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பெருமை இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெருமைக்கும், எனக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றாலும், அதன் காரணமாக பெருமைக்கு எதிராக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20.02.2003 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலமாக கோவிந்தகவுண்டர் மற்றும் அவரது குடும்பத்தார்கள் சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு பொதுவான சொத்துக்கள் பிரிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் இறந்து போன 2ம் பிரதிவாதி பெருமைக்கு பாத்தியப்பட்ட சுயார்ஜித சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை தவிர வேறு பொதுவான சொத்துக்களும் உள்ளது. அவ்வாறு பொதுவான சொத்துக்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.